(2025-26-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 25 PTM 205**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் — நேரம் : 3 மணி

## சமய இலக்கியங்களும் காப்பியங்களும்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. சுந்தரரின் மார்க்கம் எது?

   அ) தாச மார்க்கம் ஆ) சற்புத்திர மார்க்கம் இ) சக மார்க்கம் ஈ) சன் மார்க்கம்

2. சுந்தர காண்டத்தின் தலைவன் யார்?

   அ) இராமன் ஆ) இராவணன் இ) சீதை ஈ) அனுமன்

3. பெருங்கதையில் உள்ள காண்டங்கள் எத்தனை?

   அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 7

4. தேம்பாவணியின் ஆசிரியர் யார்?

   அ) வீரமா முனிவர் ஆ) ஜி.யு போப்

   இ) கண்ணதாசன் ஈ) கிருட்டிணப் பிள்ளை

5. பக்தி இலக்கியத்தின் காலம் எது?

   அ) கி.பி 2-4 ஆ) கி.பி 4-9 இ) கி.பி 9-12 ஈ) கி.பி 13-16

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. “ மாயிரு ஞாலமெல்லாம்” - என்ற பதிகம் பாடப்பட்ட இடம் எது?
7. கம்பர் பிறந்த ஊர் எது?
8. வில்லிபாரதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை எத்தனை?
9. “சீறா” என்பதன் பொருள் என்ன?
10. காப்பியப் பண்பை எடுத்துரைக்கும் பழமையான இலக்கண நூல் எது?

### பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) “மன்னு பெரும் புகழ் மாதவன் மாமணி வண்ணன்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

(அல்லது)

ஆ) கந்தர் அனுபூதி உரைக்கும் பக்தி கருத்தினை அருணகிரிநாதர் வழி நின்று சுருக்கி வரைக

**(த.பி.பா.)**

12. அ) அசோக வனத்தின் வனப்பை கம்பர் வழி நின்று எடுத்துரைக்க

(அல்லது)

ஆ) காட்சிப் படலத்தில் சீதைக்கும் அனுமனுக்கும் நடந்த உரையாடல் குறித்து எழுதுக

13. அ) உதயணனின் பெருமைகளாக கொங்குவேளிர் உரைப்பவனவற்றை விளக்கி எழுதுக

(அல்லது)

ஆ) பெருங்கதை நூற் குறிப்புத் தருக

14. அ) வீரமாமுனிவர், - ஆசிரியர் குறிப்புத் தருக

(அல்லது)

ஆ) "கோபுர மணி ஒளிக் குன்ற, பேர் அகழ் நூபுரம் புலம்ப, மேல் கொடி நுடங்க" - இப்பாடல் வரிகள் இடம் பெறும் நூல் எது? இவை உணர்த்தும் பொருள் யாது?

15. அ) கோவலன் , கண்ணகி கதாபாத்திரங்களை வைத்து நாடக உரையாடல் வடிவில் ஒரு பக்க அளவில் எழுதுக

(அல்லது)

ஆ) பக்தி இலக்கியத்தின் நோக்கம் யாது? விளக்குக

## பகுதி – இ ( 5 X 8= 40 மதிப்பெண்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ) திருஞானசம்பந்தர் பாடிய திருவாவடுதுறைப் பதிகத்தில் இறைவனின் பெருமைகளாகக் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

ஆ) சிவபுராணம் உரைக்கும் செய்திகளை மாணிக்கவாசகர் வழி நின்று விவரிக்க

17. அ) சுந்தர காண்டத்தில் வரும் கடல்தாவு படலத்தில் உள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

ஆ) சுந்தர காண்டத்தில் வரும் ஊர் தேடு படலத்தில் உள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக

18. அ) மகத காண்டத்தில் மகட் கொடை குறித்து ஆசிரியர் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க

(அல்லது)

ஆ) வாரணவதச் சருக்கம் என்றால் என்ன? அதன் சிறப்பினை விவரிக்க

19. அ) மழை அழைப்பித்த படலத்தின் சிறப்பினை உமறுப் புலவர் வழி நின்று விவரிக்க

(அல்லது)

ஆ) சீனிமாமலை **காண் படலம்** உரைக்கும் செய்திகளை விளக்குக

20. அ) பக்தி இலக்கியத்தின் மூலம் சமூகத்தில் ஏற்பட்ட விளைவுகள் குறித்து விரிவாக எழுதுக

(அல்லது)

ஆ) **ஏதேனும் ஒரு தெய்வத்தை மையமிட்டு சொந்த நடையில் ஒரு பக்திப் பாடலை எழுதுக.**

***ETHICAL PAPER***

**********************